ஊராட்சி பகுதி நேர எழுத்தர்கள், தற்போது பெற்றுவரும் 800 ரூபாய் தொகுப்பூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் தற்போது பெற்றுவரும் 400 ரூபாய் தொகுப்பூதியம் 600 ரூபாயாக உயர்த்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், கூடுதலாக இயக்கப்படும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒவ்வொன்றிற்கும் தற்போது 150 ரூபாய் கூடுதலாக வழங்கப்படுகிறது; இது 250 ரூபாயாக உயர்த்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-35

ஊராட்சி துப்புரவுப் பணியாளர்கள் தற்போது பெற்றுவரும் 400 ரூபாய் தொகுப்பு ஊதியம், 600 ரூபாயாக உயர்த்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தற்போது நான் அறிவித்துள்ள இந்த ஊதிய உயர்வினால் கிராம ஊராட்சிகளின் 62,831 அடித்தட்டுப் பணியாளர்கள் பயன் பெறுவார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த ஊதிய உயர்வு, 1-4-2005 முதல் வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு 16.24 கோடி ரூபாய் ஆகும்.

கிராமப்புற மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பணிகளான குடிநீர் வழங்கல், தெரு விளக்குப் பராமரிப்பு மற்றும் துப்புரவுப் பணிகள் முதலான பணிகளை மேற்கொண்டுவரும் கிராம ஊராட்சிகளின் அடித்தட்டுப் பணியாளர்கள், மேலும் ஊக்கம் பெற்று உற்சாகத்துடன் பணிபுரிய இந்த ஊதிய உயர்வு உறுதுணையாக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் செப்பனிடுதல் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள கிராமங்கள் யாவும் தேவையான அடிப்படை வசதிகளைப்பெற வேண்டும்; கிராம மக்கள் யாவரும்

பொருளாதார மேம்பாடு அடைந்து வளமான வாழ்க்கையைப் பெறவேண்டும் என்பது என்னுடைய அரசின் குறிக்கோள் ஆகும். இந்தக் குறிக்கோளை எய்தும் வகையில், எனது அரசு முனைப்பான பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சாலை மேம்பாடு, சிறு பாலங்கள், நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல், குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல், கழிப்பிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல், உரக் குழிகள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், கிராமச் சந்தைகளை மேம்படுத்துதல், மீன் உலர் களங்கள் அமைத்தல், சத்துணவுக் கூடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு கட்டமைப்பு வசதிகளை எனது அரசு ஏற்படுத்தி வருகிறது.

இதேபோன்று, கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் அதிகாரம் அளித்தல் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டம்—Empowerment and Poverty Reduction Programme என்ற திட்டத்தை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது. மேலும், சுய உதவிக் குழுக்களின்மூலம், கிராமப்புறங்களில் உள்ள பெண்களுக்குச் சுய வேலைவாய்ப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் அரசால் கட்டித் தரப்படுகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 154.31 கோடி ரூபாய் செலவில் 37,676 புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. தொகுப்பு வீடுகள் கட்டும் பணி, மிக விரைவாக தமிழகத்தில் செயல்படுத்தப்பட்ட காரணத்தால், மைய அரசு முதலில் ஒதுக்கீடு செய்த 90 கோடி ரூபாயுடன் கூடுதலாக 8.95 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தது.

1991 ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளில் பெரும்பாலானவை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அவற்றைச் செப்பனிட வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தொகுப்பு வீடுகளின் பராமரிப்புப் பணிகளைப் பயனாளிகளே மேற்கொள்ள வேண்டும் என்றாலும், பயனாளிகளின் ஏழ்மை நிலைமையைக் கருத்தில்கொண்டு, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் செப்பனிட, நான் தற்போது வழிவகை செய்துள்ளேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

2005 ஏப்ரல் 7] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இதன்படி, 1991 ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்டு, பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகள் அனைத்தும் செப்பனிடப்படும். இப்பணிகள் ஒவ்வொரு வீட்டிற்கும் 10,000 ரூபாய்க்கு மேற்படாத செலவு மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) பயனாளிகள்மூலம் மேற்கொள்ளப்படும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து இந்தச் செலவுகள் மேற்கொள்ளப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒதுக்கப்பட்டு வந்த நிதி 82 இலட்சம் ரூபாயிலிருந்து 1 கோடி ரூபாயாக 2005–2006 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிதியை எவ்வகையில் பகிர்ந்தளித்துப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்கான வழிமுறைகள் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. தற்போது, நான் அறிவித்துள்ள தொகுப்பு வீடுகள் செப்பனிடும் திட்டத்துக்கு, நிதி ஒதுக்கம் செய்யும்வகையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியைப் பகிர்ந்தளித்துப் பயன்படுத்தும் முறையைத் திருத்தி அமைக்க, எனது அரசு முடிவு எடுத்துள்ளது. இதன்படி, குடிநீர்ப் பணிகளுக்காக 5 இலட்சம் ரூபாய், நமது கிராமம் திட்டத்துக்காக 10 இலட்சம் ரூபாய், மாணவர் இல்லங்கள் கட்ட 5 இலட்சம் ரூபாய், கிராம ஊராட்சிகளில் சிமெண்ட் சாலைகள் அமைக்க 10 இலட்சம் ரூபாய், தெரு விளக்குகள் அமைக்க 5 இலட்சம் ரூபாய், தொகுப்பு வீடுகள் பழுதுபார்க்க 25 இலட்சம் ரூபாய், (மேசையைத் தட்டும் ஒலி) இதரப் பணிகளுக்கு — Untied outlay — 40 இலட்சம் ரூபாய் என்ற அளவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதியைப் பகிர்ந்தளித்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். தொகுப்பு வீடுகள் பழுதுபார்க்க 25 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக ஒதுக்க விரும்பும் சட்டமன்ற உறுப்பினர்கள், இதரப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட 40 இலட்சம் ரூபாயிலிருந்து இந்தப் பணிகளுக்கு நிதி ஒதுக்கம் செய்துகொள்ளலாம்.

தற்போது நான் அறிவித்துள்ள திட்டத்தின் வாயிலாக 1991 ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் வசிக்கும் 1,02,659 குடும்பங்கள் பயன் அடையும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)